# யூலை – 10 – செவ்வாய்

புனித பெலிசித்தா

நம் கடவுளோ விண்ணலகில் உள்ளார்: தம் திருவுளப்படி அனைத்தையும் செய்கின்றார்: திபா. 115:3

## முதல் வாசகம் : ஓசே 8 : 4 – 7, 11 – 13

ஆண்டவர் கூறுவது “இஸ்ராயேல் மக்கள் தாங்களே அரசர்களை ஏற்படுத்திக் கொண்டார்கள் அது என்னாலே அன்று. அவர்களே தலைவர்களை நியமித்துக் கொண்டார்கள் அதைப்பற்றியும் நான் ஒன்றுமறியேன். தங்கள் வெள்ளியாலும் பொன்னாலும் தங்களுக்கெனச் சிலைகளைச் செய்தார்கள் தாங்கள் அழிந்துபோகவே அவற்றைச் செய்தார்கள்.சமாரியா மக்கள் வழிபடும் கன்றுக்குட்டியை நான் வெறுக்கின்றேன் என் கோபத்தீ அவர்களுக்கு எதிராய் எரிகின்றது. இன்னும் எத்துணைக் காலம் அவர்கள் தூய்மையடையாது இருப்பார்கள்?. அந்தக் கன்றுக்குட்டி இஸ்ரயேலிடமிருந்து வந்ததன்றோ! அது கடவுளல்லவே! கைவினைஞன் ஒருவன்தானே அதைச் செய்தான்! சமாரியாவின் கன்றுகக்குட்டி தவிடுபொடியாகும். அவர்கள் காற்றை விதைக்கிறார்கள் கடும்புயலை அறுப்பார்கள். வளரும் பயிர் முற்று வதில்லை. கோதுமை நன்றாக விளைவதில்லை. அப்படியே விளைந்தாலும் அன்னியரே அதை விழுங்குவர்.எப்ராயிம் பாவம் செய்வதற்கென்றே பலிபீடங்கள் பலசெய்துகொண்டான் அப்பீடங்களே அவன் பாவம் செய்வதற்குக் காரணமாயின. ஆயிரக்கணக்கில் நான் திருச்சட்டங்களை எழுதிக் கொடுத்தாலும், அவை நமக்கில்லை என்றே அவர்கள் கருதுவார்கள்.பலியை அவர்கள் விரும்புகின்றார்கள் பலிகொடுத்து, அந்த இறைச்சியையும் உண்ணுகிறார்கள் அவற்றின்மேல் ஆண்டவர் விருப்பங்கொள்ளவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் தீச்செயல்களை நினைவில் கொள்கின்றார் அவர்கள் செய்த பாவங்களுக்குத் தண்டனை வழங்குவார் அவர்களோ எகிப்து நாட்டிற்குத் திரும்புவார்கள்“.

**பதில்பாடல் :** இஸ்ரயேலரே ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்

## நற்செய்தி: மத்தேயு 9 : 32 - 38

அக்காலத்தில்பேய்பிடித்துப் பேச்சிழந்த ஒருவரைச் சிலர் இயேசுவிடம் கொண்டுவந்தனர்.பேயை அவர் ஓட்டியதும் பேச இயலாத அவர்பேசினார். மக்கள் கூட்டத்தினர் வியப்புற்று, ”இஸ்ரயேலில் இப்படி ஒருபோதும் கண்டதில்லை” என்றனர்.ஆனால் பரிசேயர், ”இவன் பேய்களின் தலைவனைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறான்” என்றனர்.இயேசு நகர்கள், சிற்றூர்கள் எல்லாம் சுற்றிவந்தார். எங்கும் அவர்களுடைய தொழுகைக்கூடங்களில் கற்பித்தார் விண்ணரசைப்பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார் நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள்மேல் பரிவுகொண்டார் அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்.அப்பொழுது அவர் தம்சீடரை நோக்கி, ”அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு.ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் நாம் பார்க்கும் போது வாய் பேசமுடியாத ஒருவரை இயேசுவினிடத்தில் கொண்டுவருவதைக் காண்கின்றோம். அவனுக்கு பேய் பிடித்திருந்த காரணத்தினால் அவன் பேசமுடியாதவனாய் இருந்தான். அவனுடைய நண்பர்கள் அவனை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள் இயேசுவினால் அவனைக் குணமாக்கமுடியும் என்ற நம்பிக்கை அவனுடைய நண்பர்களுக்கு இருந்தது. அந்த பேய் பிடித்த நண்பன் மீது அவர்களுக்கு மிகுந்த அக்கறையும் பரிவும் இருந்தது. வாழ்க்கையில் எத்தகைய துன்பங்களை இத்தகைய மக்கள் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நண்பர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். இறைமகன் இயேசுவும் அந்தபேய் பிடித்திருந்த மனிதன் மீது இரக்கம் கொண்டு அவனுக்கு பூரண குணமளிக்கின்றார். பேயை அவர் ஓட்டியதும் பேச இயலாதவர் பேசியதும் மக்கள் கூட்டத்தினர் வியப்படைந்து “இஸ்ராயேலில் இப்படி ஒரு போதும் கண்டதில்லை”என்றனர். முனிதராக மதிக்கப்படாதவரை முழு மனிதராக்குகின்றார். நம்பிக்கையோடு இயேசுவை தேடிவருபவர்களை இயேசு ஒருநாளும் கைவிடுவதில்லை என்பதனை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது. அதேவேளையில் மக்கள் மத்தியில் வியப்பும் இன்னும் சிலர் மத்தியில் குறைகாணும் பண்பும் வெளிப்படுகின்றது. பரிசேயர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளாததால் குறை கூற முற்படுகின்றார்கள், இயேசுவைக் குற்றவாளியாக்க முற்படுகின்றார்கள். அவர்களிடம் உதவி செய்யும் மனப்பான்மை இல்லை உதவிசெய்பவர்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும் இல்லை. நம் வாழ்விலும் துன்பபடுகிறர்களுக்கு உதவிசெய்து வாழும் மனதை இறைவன் எங்களுக்கு தந்தருள மன்றாடுவோம் ஆமென்.